DUPLICATE

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

விரோதிஞு (1889) ஆவணிமீ உஉ ஆரம்பமானது.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஞு 1-க்கு | | ரு. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரு. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, | ரு. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ரு. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரு. 5-00 |
| ,, | கால்கலம் | ரு. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண முறைப்படியன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கடு. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஞு புரட்டாதிமீ உகூஉ (ககூஉங அக்டோபர் கடு) திங்கட்கிழமை. { இலக்கம்—உகூ.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## ஸ்ரான்டேர்ட் கொளுக்கியோடுகள்.

**(Standard Tiles.)**

இவை வேரூக் என்னுமிடத்திலுள்ள ஸ்ரான்டேர்ட் ஓட்டுக் கம்பனியாரால் செய்யப்பவேன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டின் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையுங் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விஷயத்திலும், ஏனைய ஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம். (H. 18.)

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கோடுக்கும்!!

### ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

### புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரிசைஷ பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரு. 10. 50-மாத்திரை ரு. 4-0-0
20-மாத்திரை ரு. 2. வி. பி. சார்ஜ்வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

### ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென மேலும் பெருகும். தொத்து ரோய், அவமிருத்து தோஷம், பேசவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், கேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
பழனி. S. I.

(Q. 40)

M. S. MAIDEEN ABDULKADER MARICAR,
& Doctor, T. N. SAMIPILLAI & Co.
MUHIADEEN MEDICAL HALL,
PORTO-NOVO, S. A. Dt.

எனது அன்பர்களே. சற்று கவனியுங்கள்.

எனது அன்பர்களே. சற்று கவனியுங்கள்.

இனும்! இனும்!!

இந்த லேகியம்போல் பிற வைத்தியர்கள் செய்து கொடுக்கும் பக்ஷத்தில் ரூபா 1000 இனும் கொடுக்கப்படும்.

## சிட்டுக்குருவி வீரதத்துவ லேகியம்.

எனது அன்பர்களே, சிட்டுக்குருவி லேகியமென்று சிலர் செய்து விற்கிறார்கள். அதாவது நரம்புகளுக்குத்தான் கொஞ்சம் வலுவைக்கொடுக்கும். இந்த லேகியம் அப்படியல்ல; எல்லா வியாதிகளையும் கண்டிக்கும்; இந்த வீர தத்துவ லேகியத்தினுடைய மகத்துவம் புசித்தவர்கள் அறிவார்கள். இந்த லேகியமானது செய்யும் முறையும் பாகமும் தற்காலம் ஒருவரும் செய்தும் அறிந்துமிரார்கள். அதாவது சித்தர்கள் பெரியோர்கள் பெரிய பெரிய நாதாக்களுடைய செய்யும் முறை சுல்த்தான்கள் ராஜாக்கள் செய்து சாப்பிடும் வீர தத்துவம் தங்கிய லேகியம். தங்கம் குங்குமப்பூ கஸ்தூரி அம்பர் பவளம் முதலிய ஜீவசத்துக்களைக்கொண்டு சேகரிக்கப்பட்டது. இந்த லேகியமானது 1008 நரம்புகளுடைய வியாதிகளையும் சுத்தப்படுத்தி மேகவெட்டை மேகச்சூடு மேகராங்கை முதலியவற்றை நீக்கும். எங்கள் கம்பெனி மருந்தை ஒருமுறை தருவித்துச் சாப்பிடும் பக்ஷத்தில் தங்கள் ஆயுள் பரியந்தம் கைவிடமாட்டீர்களென்பது நிச்சயம்.

40 நாள் ஒரு மண்டலம் டப்பி 1க்கு ரு. 10—0—0
20 நாள் அரைமண்டலம் டப்பி 1க்கு ரு. 6—0—0
V. P. சார்ஜ் பிரத்தியேகம் 0—0—0

லேகியம் சாப்பிடும் முறை லேகியத்துடன் அனுப்பப்படும்.

N. B. வியாதியுள்ளவர்கள் டாக்டர் நேரில் பார்க்கவும். எங்கள் கம்பெனியில் எல்லா விதமான லேகியங்களும் மாத்திரைகளும் தைலங்களும் திராவகங்களும் பஸ்பங்களும் சகாய விலைக்குக் கொடுக்கப்படும்.

சிங்கப்பூர் பினாங் மலாய் எஸ்டேட்களுக்கு மருந்துக்கிரயமும் தபால் செலவுக்காக ரு. 2ம் முன்னதாக மணிஆடர் அல்லது ரிஜிஸ்டர் மூலமாக அனுப்பவேண்டியது. அப்படி அனுப்பா விட்டால் அனுப்பப்படமாட்டா.

எங்களுடைய கம்பெனிக்கு கமி[illegible] ஏஜண்டுகள் தேவை. [illegible] கமிஷன் கொடுக்கப்படும். விபரம் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

(தந்தி விலாசம்—முகையதீன்).

மானேஜர்: எம். எஸ். மெய்தீன் அப்துல்காதிர் மரைக்காயன்,
& டாக்டர் டி. என். சாமிப்பிள்ளை & கோ.,
முகையத்தீன் மெடிக்கல் ஹால்,
பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

எங்கள் சோல் ஏஜண்டு:
P. செல்லையா செட்டியார்,
கொத்தமல்லி ரோட்டு,
நாவல்பட்டி போஸ்ட், சிலோன்.

(Y. 20)

## தீபாவளி நெருங்கிவிட்டது.

கனவான்களே! உடனே ஆர்டர் அனுப்புங்கள்!!

விலைசரசம்! உடைநயம்!! அருமையான தினுசு!!!

# சேலம் ஜவுளி தினுசுகள்.

எங்கள் கம்பெனியில் சேலத்தில்தயாராகும் சகல விதமான தினுசுகளிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு விசேஷமாக பிடித்தமுள்ள தினுசுகளிலும், ஜோடி, துப்பட்டா, துயிலிமாதிரி அங்கவஸ்திரங்கள், பச்காணுக்களும், நயம் 120 கெ. 100 கெ. 80 கெ. நூலில் பலகலர் பட்டினாலும் வெள்ளி ஜரிகையினாலும் கரைகளுடையதும் பலவிதமான பேட்டுகள் வைத்து அற்புதமான வேலைப்பாடுடையதும் பட்டினாலும் ஜரிகையினாலும் பலவிதமான முந்திகள்போட்டதும் முகதியில்சிட்டை போட்டதாகவும் கிடைக்கும். உடல் நயம் வெண்பட்டில் ஜரிகைப்பேட்டுஜோடி, துப்பட்டாக்களும், பலகலர்பட்டு முடிலேஞ்சிகளும், பலகலர்பட்டுகளில் அருகுமுந்தியில் ஜரிகையினால் பலவித உருவங்களமைத்து உடலில் ஜரிகைக் கொட்டடி போட்ட லேஞ்சிகளும் தயாராகிறது.

குறிப்பு:—எல்லா தினுசுகளும் நம்ம சொந்தத் தறிகளில் தயாராவதால் நெசவு அழுத்தமாகவும் கோட்டமுள்ளதாகவும் அருமையான தினுசுகளாகவும் கிடைக்கும். விலை சகாயமாக எல்லா ஆர்டர்களுக்கும் வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. தினுசு பிடித்தமில்லாவிடில் திருப்பியனுப்பி வேறு தினுசு பெற்றுக்கொள்ளலாம்.

தந்திவிலாசம்,
ஜவுளி சேலம்,
Javuli Salem.

கா. கோ. அ. வெ. கு ஒபுளிசெட்டியார் & Co,.
ஜவுளிவியாபாரம் கொகை சேலம்.

(Q. 44)

### காகிதாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

### வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினால் நெய்யப்பட்டதுமான சால்வை,

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பேனி.
பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

(Y. 18.)

### சருவஞானோத்தர ஆகமம்

ஞானபாதம் தமிழ் மூலமும் முத்திரந்த விருத்தியும்.

இது ஸ்ரீசண்டபரமேசுவரரால் ஸ்ரீசுப்பிரமணியருக்கு உபதேசித்தருளப்பெற்றது. சைவ சித்தாந்த சாரமாயுள்ளது. விருத்தியில் பல அரும்பெரும் விஷயங்கள் விளங்கும். வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. நயம் கிளேஸ் காகிதத்தில் பக்கம் 200 வரையுள்ளது. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 1—8—0.

தபால் சார்ஜ் வேறு.

ஒரே முறையில் ஐந்து புத்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகம் சேர்த்துக் கொடுக்கப்பெறும்.

☞ பொ முத்தையபிள்ளை,
சிவாகம சங்கம்,
தேவகோட்டை.

(H. 20)

Telegrams: "APPANNA', Bangalore City'

## கெ. தி. அப்பண்ணு & கம்பெனி,

பெங்களூர் நகர், (இந்தியா).

### பிரசித்திபெற்ற மைசூர் ஊதுவத்திகள்.

ரு.அ.பை.

பன்னீர்வத்திகள் சேர் 1க்கு விலை 0-12-0 முதல் ரூபா 2-0-0 வரை.
புனுகுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 4-0-0 வரை.
மத்தாப்புவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 3-0-0 வரை.
ஜவ்வாதுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 5-0-0 முதல் ரூபா 7-0-0 வரை.
கஸ்தூரிவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 5-0-0 முதல் ரூபா 12-0-0 வரை.
அம்பர்வத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0 முதல் ரூபா 20-0-0 வரை.
வாசனைவில்லைகள் வில்லை 1க்கு விலை ரு. 0-4-0 முதல் ரூபா 5-0-0 வரை.
புனுகு தோலா 1க்கு விலை ரூபா 10-0-0 முதல் ரூபா 12-0-0 வரை.
தசாங்கம் சேர் 1க்கு விலை ரூபா 2-0-0 முதல் ரூபா 3-0-0 வரை.

### கூந்தல் வளரும் தைலம்.

டில் மோஹினி ஹேர்ஆயில்புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.
ஜாஸ்மின் ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.
பளவர் பஹார் ஹேர் ஆயில் புட்டி1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.
கமலா ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.

### ஒட்டோ வாஸனை ஸெண்டுகள்.

ஒரு கிராம் கொண்ட சிறியபாட்டல்கள் டஜன் 1க்கு விலை ரூபா 6-0-0

### சந்தன சோப்புகள்.

டஜன் 1க்கு ... ... ரூபா 6-0-0

### சந்தன மரத்தூள்.

பவுண்டு 1க்கு ... ... விலை ரூபா 1-8-0

தங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

Address:—
K. T. APPANNAH & Co,
Bangalore City.
(INDIA).

(Y. 16.)

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

### புஷ்டிக்கு கைகண்ட ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரிசைஷக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரு. 10. 50 பில்ஸ் ரு. 4-0-0
20 பில்ஸ் ரு. 2. வி. பி. சார்ஜ் வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரு. 2.

### பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரு. 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரு. 1.

T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை, பழனி. S. I.

(Q. 41.)

### நமது பத்திரிகை.

சரஸ்வதி பூசையின் பொருட்டு நமது இந்து சாதனம் வருகிற வியாழக்கிழமை வெளிவராது, அடுத்த திங்கட்கிழமை (22--10—23) வழக்கம்போல் வெளிவருமென்பதை அபிமானிகட்குத் தெரிவிக்கின்றேம். விஜயதசமியன்று எமது ஆபீஸ் மூடப்படும்


# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரி௵ புரட்டாதி௴ 29௳ திங்கட்கிழமை.


### அந்தணர் கடமை.—உ.

பௌத்த கத்தோலிக்க மகமதிய சமயங்களில், குருமார்களாக இருக்க வேண்டியவர்கள் அம்மார்க்கங்களுக்குரிய கல்வியை நன்கு கற்றுச் சில பரீட்சைகளிற் சித்தியடையவேண்டியவர்களாகவே யிருக்கின்றார்கள். இவ்விதமான கட்டுப்பாடு ஆதியில் நமது பிராமணர்களிடத்திலு மிருந்தது. ஆனாற் காலகதியில் நம்மவர் இக்கட்டுப்பாட்டை நழுவவிட்டுக் குருக்கள் மகன் குருக்களென்றவாறாக வரத் தலைப்படவே இக்கட்டுப்பாடு அற்று இக்கதி எய்தலாயிற்று. பிராமணர் சிலர் தங்களை ஏனைய வருணத்தவர் இக்காலத்தில் மதிப்பதில்லை யென்று குறைசொல்லக் கேட்டிருக்கின்றேம். அது தவறு. கல்வியறிவுடைய பிராமணர் இக்காலத்தும் எக்காலத்தும் மதிக்கப்படுகின்றனர். கல்வியறிவற்றவர்களே எக்காலத்தும் மதிக்கப்படாதொழிவர். இனி, பிராமணரை ஏனைய வருணத்தவர் நோக்கி "சுவாமீ, உங்களுக்கு விதிக்கப்பட்ட ஒழுக்கத்தை நீங்கள் அனுசரிக்கின்றீர்களில்லையே" என்று கேட்டால், "மற்றும் வருணத்தவர்களாகிய நீங்கள் உங்களுக்கு விதிக்கப்பட்ட ஒழுக்கத்தின்படி நடந்துகொள்ளுகின்றீர்களா? நீங்களும் அப்படித்தான்; நாங்களும் அப்படித்தான்" என்று பதில் சொல்லிவிடுகின்றார்கள். பிராமணர் மாத்திரம் ஒழுக்கங் குன்றிவிட்டார்கள், ஏனைய வருணத்தார் ஒழுக்கங் குன்றவில்லையென் யாஞ் சாதிக்க முற்படவில்லை. ஆனால் குரு எப்படியோ சிஷனும் அப்படியே; குருவுக்கேற்ற சிஷன் என்றபடி ஏனைய வருணத்தாரையுந் திருத்திநடத்த வேண்டியபொறுப்புப் பிராமணர்மேலதானமையினால், அந்தணர் அங்ஙனங் கூறுவது முறையன்று. தாம் திருந்திநடந்து கொண்டு தங்கள்சிஷரையுந் திருத்திநடத்துதல் குருமேற் பாரமாகும்.

நமது பிராமணர்களைப் பழைய நன்னிலைக்குக் கொண்டுவரும் விஷயத்திற் பிராமணர் மாத்திரம் உழைத்தல் போதியதன்று. ஏனைய வருணத்தாரும் ஒத்துழைத்தல்வேண்டும் சனத்தலைவர்கள் தேசாபிமானிகள் சைவாபிமானிகள் பிராமணச் சிறுவர்கள் சம்ஸ்கிருதம் பயிலுதற்கான வசதிகளைத்தாஞ் செய்தல் வேண்டும். பிராமணர் அதிகமாக வசிக்குமிடங்களில் சம்ஸ்கிருத ஆரம்பக்கல்வியாயினும் பயிலக்கூடிய பாடசாலைகளை ஸ்தாபித்தல்வேண்டும். வண்ணை வைத்தியேஸ்வரன் கோயில் நல்லூர்க் கந்தசுவாமிகோயில் மாவிட்டபுரக் கந்தசுவாமிகோயில் போன்ற பிரதான கோயில்களின் அதிகாரிகள் அக்கோயிற் பொறுப்பிலே கோயில்வீதியில் சம்ஸ்கிருதவித்தியாசாலை ஸ்தாபித்து, தங்கள் கோயில் அர்ச்சகராயும் புரோகிதர்களாயுமுள்ள பிராமணப்பிள்ளைகளையும் மற்றும் பிராமணப் பிள்ளைகளையும் அவ்வித்தியாசாலைகளிற் பயிலும்படி ஒழுங்கு செய்தல்வேண்டும். இவ்வித்தியாசாலைகளில் ஆரம்பக் கல்வியையாயினும் இவர்கள் பயின்றபின்னர் சுன்னாகம் பிராசீன வித்தியாசாலைபோன்றவித்தியாசாலைகளில் இப்பிள்ளைகள் சென்று உயர்தரக் கல்வி பயிலுதற்கான வசதிகளைச் செய்தல்வேண்டும்.

குருக்கள்மாரா யுள்ளவர் தாம் செய்யுங் கிரியைகளின் தத்துவார்த்தத்தைத் தாங்கள் அறிந்திருந்தாற்றான் அவற்றை விதிப்படி செய்ய முடியும். தாம் விளங்காமற் கிரியைகளைச் செய்ய முயலுதல் குருடனுக்குக் குருடன் வழி காட்டவினைத்தலை யொக்கும். பௌத்தம் முதலிய மதங்களில் இக்காலத்திற் குருமாரே சமயபோதகர்களாகவும் சமயத்தை வளர்ப்பவர்களாகவு மிருத்தல்போல நமது பிராமண சைவக் குருமாரே சைவசமயத்தை ஏனையோருக்குப் போதிக்கவும் அதனை நன்கு பரிபாலிக்கவுந் தக்கவர்களாக விருத்தல்வேண்டும்.

பிராமணர்கள் ஆங்கிலம் படிக்கவொண்ணுது உத்தியோகம் பார்த்தவொண்ணு தென எவருஞ் சொல்லத் துணியார். தமக்குரிய சம்ஸ்கிருத தமிழ்க் கல்வியை வேண்டிய அளவிற்குப் படித்துக்கொண்டு தங்கள் வருணாச்சிரமத்தினின்றுந் தவறாது ஆங்கிலம படித்து அவர்கள் உத்தியோகம பார்ப்பதனால் வருந் தீமை யாதுமில்லை அங்ஙனஞ் செய்தலை விடுத்துக் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றவாறாய் ஆங்கிலத்தை மாத்திரம் படித்து அந்நிய நாகரிகத்தைப் பின்பற்றி ஏனைய வருணத்தாருக்குந் தமக்கு மிடையே யாதும் பேதந் தோன்றாதபடி யொழுகத் தலைப்படுவரேல் அவர்கள் தமக்குரிய மதிப்பையுமிழந்து இந்தியாவிலுள்ள உத்தியோகப் பிராமணர்போல் இங்கும் ஒதுக்கி வைக்கப்படுவரென்பது திண்ணம்.

### இவர்களுடைய நோக்கமென்ன?

அனுராசபுரத்திருந்த கள் சாராயத் தவறணைகளெல்லாம் நீக்கப்பட்டு வடமத்தியமாகாணம் தவறணைகள் இல்லாத இடமாகவந்துவிட்டதென்பதையிட்டு நாமெல்லாம் அதிக மகிழ்ச்சியடைந்திருந்தோம். ஆனாற் சில தினங்கட்கு முன்னர் அனுராசபுரத்தில் வசிக்கும் நால்வரால் வெளியிடப்பட்ட விளம்பரத்திலொன்று எமக்கும் அகப்பட்டது. அதனை இங்கே தருகின்றேம்.

"அனுராஜபுரத்தில் சாராயத் தவறணை திறக்கவேண்டு மென்பதைப்பற்றி வடமத்தியமாகாண ஏசண்டரவர்கள், டிை இடத்தில் சாராயத் தவறணை திறத்தல் அவசியமோவெனத் தெரிந்துகொள்ளும்படி, டிை ஊரில் தலைவரிப்பண மெடுப்போர் தொகையில் 100 க்கு 60 வீதம் விரும்பினால் திறக்கத் தீர்மானித்திருப்பதால், ஆள்வரிப்பணத் துண்டு பெற்றிருப்பவர்களனைவரும் தங்கள் தங்கள் ஆள் வரிப்பணத் துண்டுகளோடு, 1923ம்௵ அக்டோபர்௴ 10௳ கச்சேரியில் போய் காலை 7 மணிக்கும் மாலை 7 மணிக்குமிடையில் தத்தம் ஒப்பங்களை வைத்து தவறணை திறக்கவேணுமென முன்வருமாறு அனைவரும் தயவாய்க் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இப்படிக்கு,

V. இராமசாமி, S. நடராஜா,
A. V. de சில்வா, S. நவரத்னராஜா."

இந்த விளம்பரத்திலே [illegible]ட்டவர்களுள் ஒருவர் தவிர மூவரும் யாழ்ப்பாணத்துத தமிழ்மக்களாவர். மிஸ்றர் டீ சில்வா என்பவர் மாத்திரம் சிங்கள வகுப்பைச் சேர்ந்தவர் போலும். அனுராசபுரத்திலே பெருந் தொகையினர் சிங்கள சாதியத்தவர். அவர்கள் இவ்விஷயத்தில் மாறாக நிற்கின்றனரென்பது கொழும்பில் வெளியாகும் சிங்கள தினசரிப்பத்திரிகைகளாகிய "டெயிலி நியூஸ்" முதலியனவற்றால் அறியக்கிடக்கின்றது. பஞ்சமாபாதகங்களில் ஒன்றாகிய மதுபானத்துக்குத் துணையாக நமது தமிழ் மக்கள் அவர்களுள்ளுங் கல்வியறிவான் மிக்கவர்கள் எக்காலத்திலாவது உழைத்தமையை நாம் கேள்விப்பட்டதில்லை. யாழ்ப்பாணத்திலேயுள்ள தமிழ் நன்மக்கள் இன்றும் மதுபானத்தையும் தவறணைகளையும் ஒழித்தற்குத் தங்களால் ஆனமட்டும் பிரயாசப்பட, இங்கிருந்து அனுராசபுரத்திற்குச் சீவனார்த்தமாகச் சென்ற நஞ்சகோதரர் இங்ஙனம் பிழையான வழியில் இறங்கித் தமக்கும் தம்மைச் சார்ந்த தமிழ்மக்களுக்கும் தீரா வசையைத் தருதற்கு முயலுதல் முறையல்லவே. கள் சாராயத தவறணைகளைத் தவிர்த்துவிட்டு, அந்நிய நாட்டுக் குடிவகைக் கடைகளை மாத்திரம் அகற்றாமல் விட்டமையினால் சோரமாக மதுவிற்றல் (அந்நியநாட்டு மதுபானம் பெரிதுஞ் செலவாதல்) அதுவாயிலாக நமது நாட்டுப்பணம் அந்நிய தேசத்துக்குச் சென்று சேர்தல் முதலிய தீமைகள் ஏற்பட்டுவிட்டனவென்பது உண்மையே. அவற்றைக் குறித்து இப்பத்திரிகையிலுங் காலந்தோறும் எழுதியுள்ளோம். இந்த நியாயம்பற்றி நமது சகோதரர் மூவரும் அனுராசபுரத்திலே பழையபடி தவறணைகளைத் திறக்க முயன்றுள்ளனரேல் அது தவறாகும். அங்ஙனம் கணக்கிட்டுப் பார்த்தாலும் மதுக் கடைகளை அகற்றியபின்னர் அந்த இடங்களிலே மதுபானங் குறைந்துவிட்ட தென்பதை எவரும் மறுத்தல் முடியாது. மேலும் அந்நியநாட்டு மதுபானம் இங்கே விருத்தியாகிவந்தால், அதனை நீக்குதற்கு அரசினருடன் வாதாடுவதை விடுத்து, தவிர்த்த தவறணைகளை மீளத் திறக்க நினைப்பது நீதியாகுமா? மேலும், குறித்த விளம்பரத்தை வெளியிட்டவர்தாம் இன்ன நியாயத்தினால் தவறணைகளைப் பழையபடி திறத்தற்கு முயற்சிசெய்கின்றேம் என்பதையேனும் அந்த விளம்பரத்திற் காட்டினாரல்லர். நன்மையான கருமத்தைச் செய்ய முயல்வோரும் தாம் அக்கருமத்தைச் செய்யப் புகுந்தமைக்குக் காரணங் காட்டிச் செய்தல் இயல்பாக, எவருங் காத்திராத இத்தீயகருமத்திற்குக் காரணங்காட்டாது விளம்பரம் விடுத்தல் இம்மூவர்தொழிலாகவிருக்கவொண்ணுதன்றே? நமது சகோதரர் மூவரின் செயலைக் கண்டு யாழ்ப்பாணத்திலும் மற்றுமிடங்களிலுமுள்ள தமிழபிமானிகள்பலர் வெட்கமும் மனவருத்தமும் ஆத்திரமும் அனுதாபமும் உடையவராய், பல கடிதங்கள் வரைந்து இப்பத்திரிகையில் வெளியிடும்படி எமக்கு அனுப்பியுள்ளனர். நாம் அவற்றை வெளியிடாது, குறித்த மூன்று சகோதரரும் இங்ஙனம் அடாத கருமத்திற் றலையிட்ட காரணமென்னவென்பதை அறியும் பொருட்டே இதனைஎழுதலானேம். சகோதரர்கள், தாஞ் செய்யப் புகுந்த கருமத்திற்குத் தக்ககாரணங் காட்டுவரேல், அதனையும் நமது பத்திரிகையில் ஏற்று வெளியிடுதற்குச் சித்தமாயிருக்கின்றேம்.

தலைவரிப்பணங் கொடுப்போரில் நூறு பெயருக்குப் பன்னிரண்டு பெயர் விகிதம் மாத்திரம், தவறணைகள் வேண்டுமென்று சம்மதங் கூறியமையினால் இம் முயற்சி வாய்க்கவில்லை யென்பதைப் பிந்திய சமாசாரத்தால் அறியலானேம்.

### யாழ்ப்பாணத்து வைத்தியரொருவர் சங்மானிக்கப்பெற்றமை.

யாழ்ப்பாணத்து நாயன்மார்கட்டு வைத்தியசாலைத் தலைவரும் பிரபல சத்திர வைத்தியருமாகிய ஸ்ரீ வெ. சிவசுப்பிரமணியபிள்ளையவர்களுக்கு, சென்னைத் தமிழ்வைத்திய சங்கத்தார் அவரது வைத்தியத் திறமையை மெச்சி, இரண்டா முறை கூடிய மகாநாட்டில் 'வைத்தியபதி' என்னும் பட்டமளித்திருக்கின்றார்கள். பிரபலமான சத்திர வைத்தியர்களாகவுள்ள நாயன்மார்கட்டு வைத்தியர்களின் வைத்தியத்திறமை உலகப்பிரசித்தமாதலால் யாம் அவர்களைப்பற்றி அதிகம் கூறுதல் மிகையாகும். ஸ்ரீ சிவசுப்பிரமணிய மவர்கள் காலத்தில் மேற்படி வைத்தியசாலை அதிக விசேஷமடைந்திருக்கின்றது. வடமாகாண ஏஜண்டர்களாகவிருந்த மிஸ்றர் H. R. விறீமன், மிஸ்றர் ஹோர்ஸ்பரோ, உதவி ஏசண்டர் மிஸ்றர் உவாடியா முதலிய உத்தியோகத்[illegible]ம், இலங்கைத் தேசாதிபதியாகிய ஸேர் ஹென்றி மனிங் அவர்களும், சென்னை திவான்பகதூர் ஸ்ரீ சதாசிவ ஐயர் முதலிய இந்தியதேசாபிமானிகள் சிலரும், பல ஆங்கில வைத்தியர்களும், ஸேர் இராமநாதனவர்கள் முதலிய தேசாபிமானிகளும், கத்தோலிக்க குருமார் சிலரும், பல நீதிபதிகளும் நாயன்மார்கட்டு வைத்தியசாலைக்கு விஜயஞ்செய்து அங்கு நடக்கும் வைத்தியத் திறமையை மெச்சி நற்சாட்சிப் பத்திரங்கள் உதவிச் சென்றுள்ளனர். ஸ்ரீ சிவசுப்பிரமணியமவர்கள் ஆங்கில வைத்தியர்களால் அசாத்தியமெனக் கைவிடப்பட்ட வித்தியாதரிசி மிஸ்றர் தில்லைநாயகம், மிஸ்றர் ஆஷ்பரியவர்கள் போன்ற நோயாளரைத் தமது வைத்தியசாலையி லேற்று சிகிச்சைசெய்து மாற்றியிருக்கின்றனர். ஆங்கில வைத்தியர்களால் இன்ன நோயென்று நிச்சயிக்க முடியாதிருந்த சிலரது நோயை ஸ்ரீ சுப்பிரமணியமவர்கள் உள்ளபடி நிச்சயித்து வைத்தியஞ்செய்து மாற்றியமையை யாம் அறிவேம். யாழ்ப்பாண நீதிஸ்தலத்தில் ஒரு அடிபிடி வழக்கிற் சம்பந்தப்பட்ட ஒருவருக்கு காலிலுள்ள என்பொன்று முறிந்துவிட, ஆங்கில வைத்தியர்கள் முறியவில்லை யென்று கூற, ஸ்ரீ சிவசுப்பிரமணிய மவர்கள் என்பு முறிந்ததென்று சொல்லி, இச்சந்தேகத்தை நீக்கும்படி குறித்த நோயாளியைச் சென்னைக்கனுப்பி (X) "எக்ஸ்" றே என்னுங் கருவிமூலமாகப் பரீக்ஷித்து ஸ்ரீ சிவசுப்பிரமணியமவர்கள் கூற்றே உண்மையெனச் சாதிக்கப்பட்ட வரலாற்றை நமது இந்து சாதனத்தில் முன்னொருமுறை வெளியிட்டிருந்தோம். இப்பொழுதும் தென்னிந்தியாவிலுள்ள பிரபல தமிழ் வைத்தியர்களாலும் ஆங்கில வைத்தியர்களாலும் நடத்தப்படும் தமிழ்வைத்திய சங்கத்தார் ஸ்ரீ சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு இங்ஙனம் பட்டமுதவி அவரைச் சங்மானித்தமை தக்கதேயாம். இந்தச் சந்தர்ப்பத்தில் யாம் சொல்லத்தக்கது இன்னுமொன்றுளது. நமது யாழ்ப்பாணத்தில் ஆங்கில வைத்தியர்களாற் கைவிடப்பட்ட நோயாளர்களை ஏற்று வைத்தியஞ் செய்து மாற்றிய வண்ணார்பண்ணை ஸ்ரீ க. முத்துக்குமாரு அவர்கள், ஸ்ரீ வை. (டொக்டர்) கந்தையா அவர்கள், புலோலி ஸ்ரீ குமரப்பர் வல்லிபுரமவர்கள் இன்னும் இங்கே விரிவஞ்சிப் பெயர் சொல்லப்படாத பிரபலவைத்தியர்களிருக்கின்றார்கள். இவர்களைப்போன்ற சிறந்த ஆயுர்வேத வைத்தியர்களையுடைமை யாழ்ப்பாணத்தவர்களாகிய எமக்கெல்லாம் பெருமிதத்தைத் தருவதாகும். சென்னைத் தமிழ்வைத்திய சங்கத்தார் இவர்களுடைய திறமையையும் அறியமுயலுதல்வேண்டும். மேலும் யாழ்ப்பாணத்திலே சென்ற வருடம் ஆயுர்வேத வைத்தியசங்கமொன்று ஸ்தாபிக்கப்பெற்றிருக்கின்றது. இங்குள்ள ஆயுர்வேத வைத்தியர்களும் மற்றுமுள்ளோரும் இச்சங்க விருத்தியின்பொருட்டு இடையறா முயற்சியோடு உழைத்து, தென்னிந்தியாவிலுள்ள தமிழ் வைத்திய சங்கத்தின் நிலைக்கு இதனையுங் கொண்டுவர முயலுதல் வேண்டும்.

### சமாசாரம்.

காலநிலை:—மழை யில்லாமையினால் நெற்பயிர்களும் கமக்காரருடைய மனமும் வாடலாயின.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பரிசளிப்பு:—யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வருடாந்தப் பரிசளிப்புக் கொண்டாட்டம் நாளைத் தினம் மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அச்சமையத்தில், மேற்படி கல்லூரி அதிகார சபைத் தலைவராகிய கௌரவ ஸேர். அம்பலவாணர் கனகசபை யவர்கள் சபைத் தலைவராக விருந்து பரிசளிப்பார்.

மகிடாசுர சம்மார உற்சவம்:—நிகழும் ருதிரோற்காரி௵ ஐப்பசி௴ 2௳ வியாழக்கிழமை 4 மணியளவில் வண் வீரமாகாளி அம்மை கோவிலில் „மகிடா சுரசம்மார உற்சவமும்„ அன்றிரவு 9 மணியளவில் அம்பாள் அவ்வசுரனை மிதித்த திருநடனக்காட்சியும், அதன்பின் நான்குசாமங்களிலும் விசேஷ அபிஷேகங்களும் பூசைகளும் நடைபெறும். 3௳ வெள்ளிக்கிழமை பகல் 10 மணியளவில் மானம்பு உற்சவமும், 4௳ சனிக்கிழமை இரவு அம்பாள் அவ்வசுரனைக்கொன்ற பிரமகத்தி தோஷம் நீங்கும்பொருட்டுச் சிவார்ச்சனை செய்த திருக்காட்சியும், ஊஞ்சலும், தண்டிகைத்திருவிழாவும் நடைபெறுமென அறியலானேம்.

எறிவெடி மருந்து வியாபாரிக்கு நேர்ந்த விபத்து:—சங்கானைச் சந்தையிலே எறிவெடிமருந்து வைத்து விற்றுவந்த வியாபாரியொருவர் சாடியி லிருந்த வெடிமருந்தை யெடுத்துக் கொடுத்துவிட்டுச் சாடியைப் பழையபடி மூடியபோது சாடியின் மூடிச் சருகுப்புரியில் ஒட்டியிருந்த மருந்து, இறுக்கி மூடும்போது உரோஞ்சுண்டு தீப்பற்றி உடனே பெருஞ் சத்தத்தோடு வெடிக்கவே சாடி துண்டு துண்டாக வெடித்து வியாபாரியாரை உடனே கொன்று அயலே நின்ற சிலரைக் காயப்படுத்திவிட்டது. காயப்பட்டவருளொருவர் வைத்தியசாலையிற் பின்னர் இறந்துவிட்டதாக வதந்தி பிறக்கின்றது.

மாயமாய் மறைந்த திருடன்:—சென்ற செவ்வாய்க்கிழமை மாலை 6½ மணிவரையில் ஒரு திருடன், வண்ணார்பண்ணை வடமேற்கில் ஸ்ரீ செல்லத்துரை யென்பவர் வீட்டின் வெளிவிறாந்தையிலுள்ள சுவரில் மாட்டியிருந்த கண்ணாடிப் படமொன்றைக் கழற்றும்போது வீட்டுச்சொந்தக்காரரால் கண்டு அகப்படுத்தப்பட்டு மேற்படி பகுதி விதானையிடம் ஒப்பிக்கப்பட்டான். விதானையாரும் வீட்டுச் சொந்தக்காரர் சிலரும் அவனை உடனே யாழ்ப்பாணம் பொலிஸ்தானத்திற்குக் கொண்டுபோய் பொலிஸ்அதிகாரிகளிடம் ஒப்பித்தனர். பொலிஸ் உத்தியோகத்தர் திருடனைச் சிறிது தூரத்தில் நிற்கும்படி சொல்லிவிட்டு, கட்டளை தேட்டுச் செல்லும்படி அங்கு வந்த பொலிசருடன் பேசிக்கொண்டிருப்பதற்கிடையில், திருடன் எவருமறியாதபடி நழுவி ஓட்டம்பிடித்தான். பொலிசர் தம்மைத் தம்முடைய ஸ்தானத்திலேயே ஏமாற்றிச் சென்ற இந்தப் பக்காத் திருடனைத் திருப்பிப் பிடிக்கவுமில்லை, பிடிக்க முயலவுமில்லையென அறியலானேம். பொலிசர்மீது திருடன் வைத்திருந்த அவதானம்போல் திருடன் மீது பொலிசரும் அவதானம் வைத்திருந்தால் இத்திருடன் தப்பியோடியிருக்கமாட்டான்.

ஒருவரை முதலை பிடித்துக்கொண்டது:-அனுராசபுரத்தில் நான்கு ஆங்கில கனவான்கள் சிலதினங்களுக்குமுன் ஒரு மதம்பிடித்த யானையைப் பின்பற்றிச் சென்றார்கள் அவர்கள் திரும்பும் பொழுது மருதன்கடவையிலுள்ள ஒரு ஓடைக்குச் சமீபத்தில் கிடந்தமுதலை ஒன்றை அவர்களுள் ஒருவர் துப்பாக்கியால் சுட்டார். அது செத்த பிணம்போல் கிடந்தது. இறந்து போய் விட்டது என்று நினைத்து, ஒருவர் அது எவ்வளவு நீளம் இருக்கின்றதென்பதை அறிய வேண்டுமென்று சமீபத்திற் சென்றார். உடனே முதலை தன்வாயைத்திறந்து அவர் தொடையைக் கவ்விக் கொண்டது. வெகுகஷ்டத்துடன் அவர் அதன் பிடியிலிருந்து தப்பினார். அக்கனவான் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு போகப்பட்டு, அங்குள்ள வைத்தியரால் வைத்திய சகாயம் செய்யப்பட்டு வருகின்றார்.

—அடிக.

பாய்க்கப்பலொன்றின்பரிதாபமான கதி:— பருத்தித்துறைக்கென்று மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டுவந்த கப்பலொன்றைக் காணவில்லையென்னும் வதந்தி சிலகாலத்திற்குமுன்னர் இங்கே பிறந்தது. இக்கப்பலிலிருந்தவரிருவர் இப்பொழுது தப்பிவந்து இக்கப்பலுக்கும் அதிலிருந்த பிரயாணிகளுக்கும் நேர்ந்த அபாயத்தைப் பின்வருமாறு கூறியுள்ளனர். "கப்பல் மட்டக்களப்புத்துறைமுகத்திலிருந்து புறப்படும்போது காற்றில் யாதாயினு மொருமாறுதலுமில்லை. திருக்கோணமலைக் கணித்தாக உயர வரும்போது ஒரு பெருங்காற்று உண்டாகி, கப்பலின் பாய் மரம் முறிந்துவிட்டது. இதனாலே பாய்போட்டோடுதல் முடியாதாக கப்பல் எடுபட்டுச் சென்றது. இங்ஙனம் 21 தினங்களாக எடுபட்டுச் சென்று இந்தியாவிலே சிற்பூர் என்னுங்கரையைச் சேர்ந்தது. பசி தாகம் பொறுக்கமுடியாமல் ஒருமனுஷி இறந்துவிட்டாள். கரையைச்சமீபித்தவுடனே நாங்கள் இறங்கிக் கரைக்குநடந்து போகும்போது எங்களுள் ஒருவன் அலையில் மோதுண்டு கடலுள் அள்ளுண்டு இறந்து போயினன்; மற்றவர்களெல்லோரும் கரையிற் போனவுடன் விழுந்துவிட்டோம். அங்குள்ள சனங்கள் நாங்கள் கிடப்பதைக் கண்டு எங்கள் வாயிற் கஞ்சி வார்த்தார்கள். சிறிது ஆயாசம் நீங்கி ஒருவாறு எழுந்தோம். இதற்கிடையில் அவ்வூர் அதிகாரிகள் எங்களைக் கண்டு கூட்டிக்கொண்டுபோய்த் தங்கள் பொறுப்பில் வைத்து நன்கு போஷித்துப் பாதுகாத்தார்கள். நாங்களிருவர் எங்களிடத்திலுள்ள சிலநகைகளை விற்று வழிச்செலவிற்குக் கொண்டு இங்கு வந்து சேர்ந்தோம். மற்றவர்களை விரைவில் அவ்வூரதிகாரிகள் இங்கே அனுப்பிவைப்பார்கள்."

## வேருவலையில் ஓர் பிரியாவிடைக் கூட்டம்.

வெருவலையைச்சேர்ந்த சீனன்கோட்டை அரசினர் ஆங்கில சுதேசபாஷா பாடசாலையிற் தலைமையாசிரியராயிருந்த கனம். க. சந்திரசேகரம் அவர்கள் கொழும்புப் பகுதியைச் சார்ந்த முகத்துவாரத்திலுள்ள அரசினர் ஆங்கில சுதேசபாஷா பாடசாலைக்குத் தலைமையாசிரியராக மாற்றப்பட்டதால் அவருக்குப் பிரியாவிடை யளித்தற்காகச் சென்ற சுக்கிரவாரத்தன்று (5-10-23) பின்னேரம் இரண்டுமணியளவில் மேலே காட்டிய வெருவலை அரசினர் ஆங்கில சுதேசபாஷா பாடசாலையில் ஓர் கூட்டம் நடந்தது. அக்கூட்டம் வெருவலை அரசினர் ஆங்கிலவித்தியாசாலை ஆசிரியர்களுள் ஒருவராகிய கனம். வே. கந்தசுவாமியவர்கள அக்கிராசனம் வகிக்க குறித்த அரசினர் ஆங்கிலவித்தியாசாலை ஆசிரியர்களுள் ஒருவராகிய கனம். யோ. இராசையா அவர்களும், குறித்த அரசினர் ஆங்கில சுதேச பாடசாலை உதவி ஆசிரியர்கள் கனம். A. மனுவேற்பிள்ளை, கனம். ம. வடிவேல், கனம். A. L. M. P. மகமட், கனம். S. A. C. M. சலீட் எனபவர்களும், வெருவலையைச் சார்ந்த கலவக்கொடை அரசினர் திராவிடபாஷா வித்தியாசாலை உதவியாசிரியர் கனம். கதிரவேற்பிள்ளை யவர்களும, வெருவலை வாசர் M. C. M. இஸ்மயில் அவர்களும் கடைசியாக இதுவரையும் குறித்தவித்தியாசாலையில் உதவியாசிரியரா யிருந்தவரும் தற்போது குறித்த கனம். சந்திரசேகரம்அவர்களுடையஇடத்தில், தலைமையாசிரியராக இருப்பவருமாகிய கனம். சி. சி. கதிரேசபிள்ளை அவர்களும், அக்கிராசனர் அவர்களும் குறித்த கனம். சந்திரசேகரம் அவர்களின் குணாதிசயங்களையும் கல்வித்திறமையையும் பிறவற்றையும் பலவாறு விரித்துப் பேச, கடைசியாக அக்கிராசனர் முடிப்புரை கூற ஐந்துமணியளவில் கூட்டம் முடிந்தது. கனம். க. சந்திரசேகரம் அவர்களும் அடுத்த நாள் தமது உத்தியோகத்துக்குப் பிரயாணமானார்.

கடிதம்.

## ஒரு ஜோஸ்யம்.

### ககூஉச-ல் இந்தியாவுக்கு விடுதலை.

கான்பூர் 'தனிக வர்த்தமான்' என்ற பத்திரிகையில் பின்கண்ட ஒரு ஜோஸ்யம் பிரசுரமாயிருக்கிறது. ஒரு அமெரிக்கர் அந்த ஜோஸ்யத்தைச் சொல்லியிருக்கிறாராம்:

1924ல் ஒருபெரிய ராஜீயப் புரட்சி பிரான்சில் ஏற்படும். பர்ஷியாவும் ஜெர்மனியும் நெருங்கிச் சம்பந்தப்பட்டிருக்கும். ஸ்பெயினில் அரசர் ஆட்சி போய்விடும். இத்தலி இன்னும் பலமான தேசமாகிவிடும். ஆஸ்திரேலியா இரண்டுபட்டுப்போகும். கனடா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்தே பிரிந்து, அமெரிக்காவுடன் சேர்ந்துவிடும். அயர்லாந்துக்குப் பூரா ஸ்வாதீனங் கிடைத்துவிடும். இந்தியாவுக்கு விடுதலை கிடைத்து, ஜனநாயக ஆட்சி ஏற்பட்டுவிடும். சீனு ஒன்றுபட்டு ஜப்பானில் ஆதிக்கம் பெறும். ஒரு தீர்க்கதரிசி கீழ்த்திசை நாடுகளில் உதயமாவார்.

—சுதேசமித்திரன்.

## ஒரு மந்திரவாதியின் பயங்கரமான செயல்.

வாசிப்பவர்களுடைய உள்ளத்தை நடுங்கச் செய்யுஞ் சமாசாரமொன்று இந்திய பத்திரிகைகளிற் காணப்படுகின்றது.

வன்னியம்பாடியைச் சேர்ந்த கோவிந்தபுரமென்னுமிடத்தில் 10 வயதுள்ள ஒரு தனவந்தன் வீட்டுச் சிறுமி விலையுயர்ந்த ஆடையாபரணந் தரித்துக்கொண்டு மாலை ஐந்தரை மணிவரையில், தன்னுடைய வீட்டிலிருந்து சிறிது தூரத்துள்ள இனத்தவர் வீட்டிற்குப் புறப்பட்டாள். புறப்பட்ட சிறுமி அன்று இரவு எட்டுமணியாகியும் மீண்டுவராமையால் பெற்றோர் திகிலடைந்து வேறுஞ் சிலரையுங் கூட்டிக்கொண்டு சிறுமியைத் தேடிப் புறப்பட்டனர். ஆனால் சிறுமியை எங்குந் தேடிப் பார்த்துங் கண்டிலர். இது நிகழ்ந்து ஒரு வாரத்தின் பின்னர், திருப்புத்தூரில் வசிக்குமொருவர் ஜோலார்ப்பேட்டையிலே, குறித்த அங்கலட்சண மெல்லா மமைந்த அழகிய ஒரு சிறுமியை, மூன்று வாலிபரோடும் இன்னொரு சிறுமியோடும் ஒரு கிழவியோடுங் கண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அவர் இவர்களைக் கவனிக்கவில்லை. இவர் பின்னொருநாள் திருப்புத்தூரிலிருந்து வன்னியம்பாடிக்குப் புகைரதமார்க்கமாகச் செல்லும்போது, குறித்த கிழவியும் மற்றச் சிறுமியும் தாமிருக்கும் பெட்டியிலிருந்து பிரயாணஞ் செய்வதைக் கண்டு கிழவியை நோக்கி "அன்று உங்களுடன் வந்த மற்ற அழகிய சிறுமி எங்கே" என்று வினவினார். வினவியவுடன் கிழவி நடுநடுங்கி இவருடைய காலில் விழுந்து கும்பிட்டு "அந்தச் சிறுமியைப்பற்றி ஒன்றுங் கேளாதீர்கள்" என்று இரந்தாள். திருப்புத்தூர் மனுஷனுக்குச் சந்தேகம் பிறந்தது. அவர் வன்னியம்பாடிக்குச் சென்றவுடனே, பட்டினம் முழுவதுஞ் சிறுமி யொருத்தியைக் காணமற் றேடித் திரிகின்றன ரென்ற வதந்தி பிறந்தமையினால் உடனே அச்சிறுமியின் பெற்றாரிடம் ஓடிப்போய்த் தாம் கண்ட செய்தியைத் தெரிவித்தார். தெரிவித்ததுமாத்திரமன்றி, கிழவியையும் மூன்று வாலிபரையும் மற்றச் சிறுமியையும் காட்டிக்கொடுத்துவிட்டார். இந்தக் கிழவி சிறுமியை யிழந்த தனவந்தன் வீட்டிற்குத் தண்ணீர் கொண்டுபோய்க் கொடுப்பவள்; வாலிபருள் ஒருவன் கிழவியின் மகன்; மற்றவன் மருமகன; அடுத்தவன் இனத்தவன். உடனே செய்தி முழுவதும் பொலிசருக்குத் தெரிவிக்கப்பட பொலிசரும் அதிக சிரமத்துடன் உழைத்தனர். அந்த மூன்ற வாலிபருள் [illegible] னாகிய மீரான்சாகிப் பின்வருமாறு கூறினன்:—

"ஒரு மந்திரவாதி என்னுடைய சிநேகிதன்; அவனுடைய வயசு 35. பத்துவயசுள்ள ஒரு அழகிய சிறுமியைப் பிடித்துத் தன்னிடந் தந்தால் தான் எனக்குத் திரவிய மெடுத்துத் தருவதாகச் சொன்னான்; நான் திரவியத்தைப் பெற ஆசைகொண்டு என் மைத்துனனுக்குத் தெரிவிக்க, அவன் குறித்த தனவந்தன்வீட்டில் முன் வேலைக்காரனாக விருந்தபடியினால் அச்சிறுமியை ஏமாற்றிக் கொண்டுவந்து தந்தான்; சிறுமியைக் கண்டதே மந்திரவாதிக்குப் பெரும் மகிழ்ச்சியுண்டானது. ஒருநாள் இரவு அச்சிறுமிக்கு மந்திரவாது ஒரு வாழைப்பழத்தை உண்ணக் கொடுத்தான்; அவள் அதனை உண்டவுடன் மயங்கிவிட்டாள்; அவளுடைய வாயிலிருந்தும் அதிகமாக இரத்தம் வந்தது; மந்திரவாதி ஒரு துளியும் விடாமல் அந்த இரத்தம் முழுவதையும் உறுஞ்சிவிட்டான். நானும் என் மைத்துனனும் பாலாற்றங்கரைக்கு மந்திரவாதியுடன் கூடிக்கொண்டுபோய்ச் சிறுமியைப் புதைத்துவிட்டோம். நாங்களிருவரும் மீண்டு வர மந்திரவாதி ஆற்றங்கரையிலேயே நின்றான். அவன அடுத்தநாட் காலையிற்றான் வீட்டுக்கு மீண்டு வந்தான். ஆனாற் சிறுமியைப்பற்றி ஒன்றும் பேசவில்லை. அதற்கு மேல் நடந்ததொன்றும் எனக்குத் தெரியாது".

மீரான்சாகிப் என்பவனைப் பொலிசர்பிடித்து ஆற்றங் கரைக்குக் கொண்டுபோய், சிறுமியைப் புதைத்தவிடத்தைக் காட்டும்படி நெருக்கினர். அன்று முழுவதும் அவன் பொலிசரை எங்குங் கொண்டு உலைத்தானன்றி உண்மையாகச் சிறுமியைப் புதைத்த இடத்தைக் காட்டினானல்லன். வன்னியம்பாடிச் சனங்களெல்லோரும் அன்று ஆற்றங்கரையிலேயே நின்றார்கள். இதற்கிடையில் மந்திரவாதியையும் பிடித்துக்கொண்டுவந்து ஒரு வீட்டுள் அடைத்துவிட்டார்கள். ஆயிரக்கணக்கான சனங்கள் மந்திரவாதியைப் பார்க்கச் சென்றிருந்தனர். மந்திரவாதியையும் ஆற்றங்கரைக்கு இழுத்துக்கொண்டுபோய்ப் புதைத்த இடத்தைக் காட்டும்படி சொல்ல அவன் காட்டினானல்லன். புதிதாகப் புதைக்கப்பட்ட பிரேதக் குழிகள் சிலவற்றைத் தோண்டிப் பார்த்தபோது இந்தச் சிறுமியின் பிரேதங் காணப்படவில்லை. உள்ளதைச் சொல்லும்படி மந்திரவாதியைப் பொலிசர் தண்டித்தபோதும் அவன் சொல்லவில்லை. தனது மந்திர வலியால் அச்சிறுமியை மீளப் பிழைப்பிப்பேன் என்று மந்திரவாதி ஒருகாற் சொன்னான்; சிறுமி இறந்துவிட்டாள் புதைத்தவிடந் தெரியவில்லை யென்று ஒருகாற் சொன்னான்; சிறுமி அணிந்திருந்த ஆபரணங்களெல்லாம் ஒரு மார்வாரி வியாபாரியிடம் விற்கப்பட்டனவாம். மந்திரவாதியும் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறான். விசாரியம் நடைபெறுகின்றது. இந்த ஊரிற் சிறுமியரை இப்பொழுது வெளியிற் செல்ல விடுவதில்லை. அந்நியர் ஆரும் வந்தால் அங்குள்ளவர்கள் பெரிதுஞ் சந்தேகப்படுகின்றனர்.

## கடிதம்.

### சுபோதத் துணுக்கைகள்.

ஐயன்மீர்! அள்ளிற்கொண்மின்.

கடவுளின் நியானமின்றி அருந்தும் உணவு அமேத்தியத்தை ஒக்கும். தந்தை தாய் பசியிருக்கத் தானும் மனைவி மக்களும் இருதகுளபானிதமாய் உண்பவனே சண்டாளன். உச்சிப்பொழுதில் பசிக்குதென வந்தோர்க்கு ஒருபிடி அன்னமாவது கொடாமல் உண்ணற்க. விருந்து நடத்தும்போது தனக்குவேறு பிறர்க்கு வேறு உணவு பரிமாறி பந்திவஞ்சனை செய்யற்க. முன் செய்த நல்வினையினால் ஒருவனுக்கெய்திய அட்ட ஐஸ்வரியங்களையுங் கண்டு அழுக்காறுற்று, அந்த நல்வினைப்பயன் நீங்கியபின, அவன் நல்குரவெய்தி அல்லலுழக்குங் காலத்தில் மகிழற்க. பகற்காலத்தில் துயிலையும், மைதுனத்தையும் நீக்குக. மல சலவிசர்ச்சனங்களை எத்தகைய அவசிய வேலையாயிருப்பினும் சிறிதுந் தடைப்படுத்தற்க. முதல் நாளிற் சமைத்த கறி தேவாமிர்தத்தை ஒத்ததாயினும் உண்ணற்க. முன் உண்ட உணவு சீரணமாகி யிருந்து பசியுண்டாகிய பின்லன்றி உண்ணற்க. தண்ணீரை உணவருந்தியபின்னன்றி, உண்ணும்போதும், இடைநேரங்களினும் அடிக்கடி அருந்தற்க. நெருப்பையுங் குளிரப்பண்ணலாம், கல்லையும் புட்பத்தைப்போல மிருதுவாக்கலாம், பட்ட மரத்தையுந் தளிர்க்கப்பண்ணலாம், பச்சை வாழைத்தண்டிலும் நெருப்புப் பற்றப்பண்ணலாம், மண்ணிலுந் தைலம் வடிக்கலாம், கல்வியறிவற்ற வம்பரைத் திருத்த ஒருவராலும் முடியாது. ஆதலால் அன்னாரோடு வாய்ப்பேச்சுத்தானும் வைத்துக்கொள்ளற்க. தாலவிருட்சத்தின்கீழிருந்து பாலைப் பருகினும் கண்டோர் யாது கூறுவர்? இருளில் புற்றின் மருங்கிற் கிடக்கும் கயிற்றையும் கண்டவர் அரவாமென்று அஞ்சுவரன்றோ? பிதா, மாதா, குரு, வயசின் முதிர்ந்தோர் வந்தால், ஆசனத்தில் நின்றும் எழும்பி மரியாதை செய்க. ஒருவர்க்குக் கொடுக்கும் புண்ணியவான்களை பக்கத்திலிருந்து வம்புபேசித் தடுக்கற்க, முன்னிலையில் ஒருவனைப் புகழ்ந்துபேசி, சென்றபின் அவனை இகழ்ந்து புறங்கூறற்க. இரத்தஉரித்துள்ள நெருங்கியபந்துக்கள் இலம்பாடெய்தி இடருழக்கத் தான் முப்போதும் உண்டு, இறுதாக வண்டியி லிவர்ந்து டாம்பீகமாகச் செல்லற்க. ஏழைகளாகிய வேலைக்காரரைக்கொண்டு கடுமையான வேலைகளைச் செய்வித்து, முடிவில் புறணி பேசிக் கூலியைக் குறைத்துக் கொடுக்கற்க. பிறர் படும் இம்சைகளைக் கண்டு மனம் பதைபதைத்துத் தன்னாலியன்ற உதவி செய்யாது பராமுகமா யிருக்கற்க. எழிய [illegible] காக்கைகளைப் பார்க்கவில்லையா? கோயிற்றிருப்பணிச்செனப் பொருள் சேர்த்துச் சாண்வயிறு வளர்க்கற்க. பிற குடும்பங்களிலுள்ள குற்றங்களை எடுத்துத் தூற்றி உல்லங்கனஞ் செய்யற்க. ஏனென்றால், தன்முதுகு தனக்குத் தெரியவில்லையே! உண்ட வீட்டுக்கு ஒருகாலத்தும் இரண்டகஞ்செய்யற்க. விதவை விருப்பால் ஆயுள்குன்றும்; தாசிவேட்கையால் தனமழியும்; பணிப்பெண் முயக்கால் குடிப்பிறப்பும் ஒழுக்கமுங் குன்றும்; கல்வியறிவற்ற துட்டப்பிள்ளைகளினால் பெற்றாரின் குடிப்பிறப்பு மனுஷத்தனம் முதலிய யாவு மழிந்துவிடும். பிதா பொருளீட்டி வையாது கடன்காரனாயிருக்கின் பிள்ளைகட்குப் பகைவனாவான். தாய் அன்னியபுருஷரோடு சகவாசஞ் செய்வாளாகில், புத்திரருக்குச் ஜன்மசத்துருவாவள். மனைவி மிகுந்த அழகுடையாளாயின் நாயகனுக்கு அட்டமத்துச் சனிபோலாவாள். புத்திரர் கல்விபயிலாத நிரட்சர குட்சிகளாயின் பெற்றாருக்கு ஏழரைச் சனி போலாவர். மனைவி கற்புநெறி தவறிவிட்டா ளெனபதை நன்றாயறிந்தபின்னரும் அவள் கையால் அன்னம் வாங்கி யருந்தற்க. பெரியோர் தம்மாட்டு அற்ப வசை எய்தினும் உயிரோடிருந்து வாழமாட்டார். "அசுணமா" என்னும் பட்சி பறைச்சத்தங் கேட்டால் சீவிக்கமாட்டாது. கவரிமான் தனது மயிரின் ஒன்று நீங்கினும் உயிரோடு வாழமாட்டாது. மானங்கெட்ட வம்பர் ஆயிரக்கணக்கான குற்றங்கள் தம்மீதறினும் அவைகளைச் சிறிதும் சட்டைபண்ணாது மனரம்மியமாயிருந்து வாழுவர். செம்மறியாட்டுக் குத்தேகத்திலுள்ளமயிர்முழுதையுங்கத்தரித்துவிடினும் சந்தோஷமாகச் சீவிக்கும். ஒருவன் மரக்கலத் திவர்ந்து சமுத்திரங் கடந்து அரிதினீட்டிய பொருள்களும் அழியும். சந்தைக் கூட்டம்போலச் சந்ததமுங் குழுமிக் காகபோசனமாகக் கலந்துண்ணும் மனைக்கிழத்தி மைந்தர் முதலிய சுற்றமும் அழியும். பூமியிலுள்ள பாரிய குலவரைகளும் பூளியாகி அழியும். அளத்தற்கரிய ஏழமாகிய சமுத்திரங்களும் பசையற வற்றி அழியும்; சகதலங்கெல்லாம் ஒளியைக் காலும் சசி, இரவி, தாரகாகணங்களும் அழியும்; பாகசாதனன், பங்கயன், பதுமநாபன் பதங்களும் அழியுமென்றால், நீர்க்குமிழியை யொத்த நமது யாக்கையா நெடுங்காலம் நிலைத்திருக்கப்போகின்றது. சீச்சீ! வெள்ளரிப் பழத்துக்குப் பூணிட்டு விளியாது வைக்க முடியுமா? ஆதலின் வந்த வேலையை மறந்துவிடாதீர்கள். அந்தோ! நாளைக்கு யாருடைய முறையென்று நிச்சயமாய்ச் சொல்லுவோமா? சாக்கிரதை! சாக்கிரதை!!

இங்ஙனம்,

க. வைத்தியலிங்கபிள்ளை,

வண்ணைநகர்.

பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக

## திருக்கோணமலைச் சைவ மக்களுக்கோர் விண்ணப்பம்.

சைவாபிமானிகாள்!

இவ்வியாசத்தைக் கண்ணுற்று மருட்சியடையாது, வேண்டும்பொழுது தைரியத்தைக் கைவிடாது, செய்யவேண்டுவனவற்றைச் சீக்கிரந் தொடங்குமாறு வேண்டி நிற்கிறேன்.

உலகத்திலே மக்கள் பல பிரிவினராயும், பல சமயத்தவராயும், பல மொழி பேசுவோராயு மிருக்கின்றனர். தத்தம் தேசத்திலும், சமயத்திலும், மொழியிலும் ஆர்வங்கொண்டவராயுமுள்ளார்கள். இவை முக்காலமுங் கைக்கொள்ள வேண்டியனவே. மேலைத் தேசவாசிகளும் கீழைத் தேசவாசிகளிற் சில வகுப்பினரும அன்றும் இன்றும் பொன்னேபோற் போற்றிவருகின்றனர். ஆனால்நம்மவர்களாகிய தமிழரோ சற்றே அலட்சியம்பண்ணி வருகிறார்கள். சிற்சில விடங்களிலுள்ளோர் இன்னுங் கைநெகிழவிடாது வைக்கப்படும்பிக்காவில், தேவாரம் பாடப்பெற்ற தலத்திலவதரிக்கப் புண்ணியஞ் செய்த நீங்கள் உண்டுடுத்துறங்குவதிலே கண்ணுங்கருத்துமாயிருத்தல் அழகா?

தமிழரசாங்க மிருந்தபொழுது தமிழரின் பிறப்புரிமையாயுள்ள சைவசமயமும் தேனினுமினிய தமிழ்மொழியும் செவ்வனே வளர்க்கப்பட்டவெனல் மிகையாகாது. ஒரு அன்னை வயிற்றிற் பிறந்து இன்னொரு மாதைப் பெற்ற தாயென்றெவருங் கூறார். ஆகையால் அரசனெவ்விதம் குடிகளுமவ்விதம் என்றபடி, முன்னோர் காலத்தில, வளர்த்தற்குரிய பல துறைகளிலும் ஒருவனுக்கிருக்கவேண்டிய அபிமானங்களெல்லாம் ஓங்குவதாயின. பின் வேற்றரச மாற்றங்களால் தமிழராயுள்ளோர்மறைந்தொழுக நேர்ந்தநிமித்தம், தேசாபிமானம் சமயாபிமானம் பாஷாபிமானம் முதலியன கொஞ்சங்கொஞ்சமாய்க் காற்றேபோற் பறக்கத் தலைப்பட்டன. அவ்விதம் முற்றாய் மறைந்திருந்தவைகள் காருண்ணிய இங்கிலிஷ் அரசாட்சியிலே பயத்திரையை நீக்கி வெளிவரத் தொடங்கிவிட்டன.

இவ்வளவு சுதந்தரத்தை அரசாட்சியார் தந்தும் உபயோகிக்காது கண்மூடி மௌனியாயிருத்தல் நன்றல்லவே!

பிற்காலசந்ததியராகிய இளைஞர்க்கு இன்றியமையாத, சமயாபிமானம் பாஷாபிமானத்தைத்தழைப்பிக்கவேண்டியது உங்கள்கடனென்பதைச் சற்றே கவனியுங்கள். எவ்வித காரியங்களையுஞ் சனசமூகத்திற்குப் பிரசங்க வாயிலாய் வெளிப்படுத்தி, வாக்கிலொன்று செய்கையிலொன்றுக்காது, சொல்வதின்படி நடந்துகாட்டினால், எவர் மனதையுங் கவர்ந்து எடுத்துக்கொண்ட காரியத்திற்சித்தியெய்தலாம். ஆனால் பிள்ளைகளுக்குச் சிறுவராயிருக்கும்போதேஎளிதிற் போதிப்பிக்கக் கூடியன பள்ளிக்கூடங்களே. ஆங்கிலம் போதிக்கப்படும் வித்தியாசாலைகளில் எவ்விதம் பிறமொழி தலைகாட்டாதோ அவ்விதம ஒரு சமயத்தாரின தாபனத்தில் பிறிதொரு சமயந் தலைக்காது. சைவசமயம் சன சமூகத்திற்குப் போதிக்கப்படாதிருக்கவும், எம சமயத்தைக் கெடுக்கும் நோக்கத்துடன பிற மதத்தாரால் சந்திகளிலும் மைதானங்களிலும் மற்றயிடங்களிலும் கண்டித்துப் பயன்படாமையை யறிந்து ஆங்காங்கே கலாசாலைகளை ஆரம்பித்து மெல்லெனச் சிறுவர்களுடைய மனதைக் கலைத்துத் தம் மதத்தைப் புகுத்திவருகின்றனர். சைவசமயங் குன்றுவதற்கு நியாயமு மிதுவே. சமய உண்மை ஒரு புறமிருக்க, ஆசைவார்த்தை பேசி அனுப்புவதே கண்கூடாகக் கண்ட விடயம்.

நம் காலத்தைச் சைவசமய வளர்ச்சிக்குச் செலவழித்தவரும், இந்தியாவிலும் இலங்கையிலும் கலவியறிவில் ஒப்பாரும் மிக்காரு மில்லாது, பிரசங்க சிங்கமாய் விளங்கினவருமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான அவதரியாதிருந்தால் யாழ்ப்பாணத்திற் சைவப் பயிர் அற்றேபோயிருக்கு மல்லவா? அவரது நன்முயற்சியே சமயத்தையும் தமிழ்மொழியையும் தலையெடுக்கப்பண்ணியது. அவரைத் தொடர்ந்துள்ள மற்றைப் பெரியாரும் ஆங்காங்கு சைவப் பாடசாலைகளைத் தாபித்துச் செவ்வனே நடத்தித் தமிழரின் முன்னுள்ள பேரையும் பெருமையையும் நிலைநிறுத்தி வருகிறார்கள்.

அவர்கள் இன்னுமுழைக்கவேண்டிய துறைகள் பலவிருக்கினும் நாம் எடுத்துக்கொண்ட விஷயமாக உங்களுக்குச் சொல்வதைச் சமாதானமாய்க் கேளுங்கள்.

இந்நகரில் (திரிகோணமலையில்) நூற்றுக்கு தொண்ணூறுக்கு மேற்படச் சைவ சமயத்தாரென்பது மிகையாகாது. இவ்விடத்தில் ஊரவர்க்காக இடம் பொருள் ஏவல் கொண்ட முதலியார் வமிசத்தவ ரிருக்கின்றனர்; தியாகஞ் செய்யக்கூடிய பிரபுக்கள் பலர் எல்லாச் சாதியாரினு மிருக்கின்றனர். இவர்கள் கூடி ஊர் நன்மைக்கும் சமயவளர்ச்சிக்குமாகத் தாபித்த பள்ளிக்கூடமொன்றே யொன்றுதான் உள்ளது பிறமதத்தவராற்றுபிக்கப் பட்டுள்ளன அளவற்றன. வேறு பள்ளிக்கூடத்திற் படிப்பவர் சைவப் பிள்ளைகளே கூடியதொகை. என்னே பரிதாபம்! இதைக் கலியின் கூற்றென்போமா? காலக் கொடுமையென்போமா? ஒன்பதுக் கொன்றாய் மினுங்கிக்கொண்டிருக்கும் பள்ளிக்கூடமும் ஆண்மக்களுக்கே. தத்தம் சமயத்துக்கு ஆணிவேர்போன்றவர்கள் பெண்களென்பதை யெவர்தான் மறக்கவல்லார். ஆண்களிலும்பார்க்கக் கூடியஅவகாசம்பெண்களுக்கிருத்தலே காரணம். அப்படிப்பட்ட பெண்மணிகளுக்கு எவ்வகைப்பட்ட சைவபாடசாலையாவது இல்லையென்னும் பொழுது உண்மைச்சமயாபிமானிகளில் கண்ணீர் உகுக்காதவர் எவர்தான். கல்வி ஆண்மக்களுக்கே தேவையென்றிவ்வூரவர் கைப்பிடித்தவரோவென்னில் இல்லை இல்லை. மறுமதத்தவர் பள்ளிக்கூடங்களில் பலசமய ஆண் சகோதரருடனும், பிரத்தியேகமாகவும் படித்தேவருகிறார்கள். என்னே கேவலம்! "பெண்புத்தி பின்புத்தி" "பேதைமையென்பது மாதர்க்கணிகலம்" என்று முன்னோர் இடித்திடித்துக் கூறியிருப்பினும் அசட்டைசெய்து பிறமத வித்தியாசாலைகளிற் படிப்பித்த குற்றத்திற்காக வருந்துவோர் உங்களிலநேகருளரென்பதை யறிய எவர்தான் பரிதாபப்படார்.

ஆகையால் சைவராயுள்ள சகோதர சகோதரிகளே, இன்னுங் காலத்தை வீணாய்ப் போக்கிக் குடியைக் கெடுக்காது, நீங்களெல்லாருமொருமனதுடையவராய் ஏகோபித்துப் பெண்பிள்ளைகளுக்கோர் சைவவித்தியாசாலை கட்ட வேண்டும்; உள்ள குறையைக் கரையேற்ற வேண்டுமென்று நினைக்கின் முடியாததல்லவே. தற்காலம் அரசாட்சியாரே நன்மனதுடன் தத்தம்சமய வளர்ச்சிக்கு உதவிசெய்யும்பொழுது உங்கள் நற்காரியத்தில் இடறுகட்டையாயிருக்க மாட்டார்களே. அழுத பிள்ளையே பால் குடிக்கும். இக்குறையைநீக்கவும், மற்றவர்களால் எள்ளப்படாதிருக்கவும், தலைவராயுள்ளோர் முன்வருவார்களென நினைக்கிறேன்.

ஆனால் இன்னொன்று சைவச் சகோதரரை வேண்டிக்கொள்வது. என்னெனில், சைவப் பள்ளிக்கூடங்களில்இடமிருக்கும்பொழுது பிறமதப் பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பாதிருக்கப் பிரதிக்கினை கொள்ளும்படியே. பேரளவிலுள்ள சைவப்பள்ளிக்கூடம் உங்கள் உதவியில்லாது நிலைதடுமாறுகிறதல்லவா! உங்கள் பிள்ளைகள் அங்குப்படித்தாற்றானே பள்ளிக்கூடம் போதியளவு வேதனம் பெற்றுக் கிரித்தீபம்போற் பிரகாசிக்கும், சைவப்பயிர்தலையெடுக்கும், கடவுள் கடைக்கணிப்பார். தமிழ்மொழிவளரும், தமிழ்த்தாய் அன்புடன் ஆசிர்வதிப்பாள், தற்காலம் ஆங்கிலமும் வேண்டப்படுவதினால் ஆங்கிலத்தோடு தமிழையும் படிப்பிக்கவேண்டும். ஆண்மக்களுக்கு இருபாடையையும், பெண்மக்களுக்குத் தமிழையும் முக்கியமாய்க் கற்பிக்கவேண்டும். சென்ற இந்து சாதனப் பத்திரிகையில் வெளிவந்த இராமநாத வித்தியாலய வெளியீட்டை வாசித்தவரெவர்தான் இன்புறுதவர். பெண்கள் உயர்தரத் தமிழ்ப்பரீட்சைகளில் அதாவது பண்டிதபரீட்சைகளில் விசேட சித்திகளுடனும், தங்கப்பரிசுகளுடனும், சித்தி யடைந்திருப்பதையறிய எவர்தான் சந்தோஷியார். வடமாகாணத்தமிழர் நன் முன் மாதிரியைப் பின்பற்றிச் சிக்கரம் எல்லாத்துறைகளிலும் நீங்கள் முன்னேற்றமடைய எல்லாம் வல்ல இறைவன் கிருபை பாலிப்பாராக.

சிவநேயன்.

திருக்கோணமலை,
1—9—23.

## ஓர் பிராமணோத்தமர் தேவை.

சிலங்கூர் இலங்கைத் தமிழர்சங்கத்தாரால் நடத்தப்படும் சோலாலம்பூர் 'ஸ்கொற்' வீதியிலிருக்கும் கந்தசுவாமி கோயிலுக்கு ஓர் பூசகர் வேண்டும். அவர் கந்தபுராணம், பெரியபுராணம், இராமாயணம், திருவிளையாடல் முதலான நூல்களுக்கு நன்குயர்த்தம்பண்ணக்கூடியவராயும், இலக்கணம் படித்தவராயும், சம்ஸ்கிருதத்தில் போதிய அறிவுடையவராயும், உலகம் மதித்த வித்துவான்களினுடைய முறைமையான மாணவராயும், பரம்பரையான பிராமண குடும்பத்தைச்சேர்ந்தவராயு மிருக்கவேண்டும். அத்துடன் உற்சவாரம்ப(துவஜாரோகண)த்துக்கும், இரதோற்சவம் முதலியனவற்றிற்கும் உரியவராயிருக்கவேண்டியது. அவர் மிக மதிப்பாய் நடத்தப்படுவார். விபரங்களைக் காரியதரிசியிடம் அறிந்துகொள்ளுக.

சி. கந்தையா,
ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
காரியதரிசி.

(Q 42)

## "பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இனபக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்று கூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை.

வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

## விளம்பரம்.

### தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரத் திராந்திகள். நீளம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

(H. 16.)

## விற்பனவு விளம்பரம்.

(1) திறமான முருகைக்கல்லுச் சுண்ணாம்பு முன்விலையிலும் ரூபா 2 குறைத்து இலாஸ்தர் ஒன்று (புசலளவு) 17 ரூபாவாகவும், (கடக அளவு) 14 ரூபாவாகவும் இந்தமாசம் முடியும் வரையில் விற்கப்படும். மேலும்,

(2) செம்மணி வெளியிலுள்ள 4 துண்டு வயல்நிலங்களும், (அவை முறையே 110¾; 25; 28; 12 பரப்புகளுள்ளன.) (3) நாயன் மார்கட்டு வைத்தியசாலைக்கு [illegible] 2 அறைகளிலுள்ள கல்வீடும் 12½ பரப்பு நிலமும், (4) 3 அறைகளிலுள்ள மெத்தைவீடும் 4½ பரப்பு நிலமும் விற்பனவுக்கு இருக்கின்றன.

நா. சி. பெருமாட்பிள்ளை,
புடைவை வியாபாரம், நல்லூர்

(Mis. 394)

## உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

### மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்தவிர்த்தி, இந்திரியக் கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இனபத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

### மூலத்திற்கு குருநாகபஸ்பம்

ஆப்ரேஷன் அவசியமில்லை; மூளை தானே கரையும்; சீழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாத முள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### இருமலுக்கு குருதாளக பஸ்பம்.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

### பிரமேக நிவாரணி

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நிற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தன லாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2, 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மெடல்கள் பெற்ற

C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
பழனி, S. I.

(H. 19).




உலகப் பிரசித்திபெற்ற

## விஸ்வநாத தைலம்.

இது சுத்தமான நல்லெண்ணெயிலிருந்தே தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் சுகந்தம் அன்றலர்ந்த ரோசாப் பூவின் சுகந்தத்தை யொத்து ஒருமுறை வைத்தால் நான்கு நாட்களுக்குப் பரிமளித்துக்கொண்டிருக்கும். விசுவநாத தைலம் போன்ற சுத்தமானதும் வாசனையுள்ளதுமான எண்ணெய் உலகத்தில் வேறொன்றுமில்லை என்று சொல்லலாம். இதன் வாசனை மனசிற்கு ஒரு விதமான கிளர்ச்சியைத் தரும். கேசத்தைப் பெலப்படுத்துவதிலும் வளரச் செய்வதிலும் உதிராவண்ணம் பாதுகாத்துக்கொள்வதிலும் அகாலத்தில் நரை வாராவண்ணந் தடுப்பதிலும் விசுவநாததைலம் சமானமற்றதாகும். வெண்தலையாதல், கிறுதி, ஞாபகக் குறைவு, தலைவலி முதலிய ரோகங்களை இத்தைலம் அற்புதமாக மாற்றிவிடு மியல்புடையது. உடம்பின் மேற்புறத்து உண்டாகும் எவ்வகையான ரோகங்களையும் இது மாற்றவல்லது.

மூன்று சீசாவிற்குக் குறைய வெளியூர்களுக்கு அனுப்பப்படா.

| | | | |
|---|---|---|---|
| 3 சீசாவின் விலை | ரூபா 3 | அணா 9. |
| 6 ,, | ,, 6 | ,, 6. |
| 1டசின் ,, | ,, 11 | ,, 8. |

தபாற் செலவும் இதற்குள் அடங்கும்.

## தாமகு ரஞ்ஜன்.
(TAMAKU RANJAN.)




குடி புகையிலையோடு ஒரு கிறெயின் தாமகு ரஞ்ஜனைக் கலந்துவிட்டுக் குடித்தால் அது மனோகரமான சுகந்தத்தைத் தரும். அதுவுமன்றித் திறமான புகையிலையை வாங்கி உபயோகிக்கவேண்டிய ஆவசியகமுமில்லை. தாமகு ரஞ்ஜன், கஸ்தூரி கொண்டும் மற்றும் மருந்து மூலிகள் கொண்டுந் தயாரிக்கப்படுதலால் சகலவித பல்வியாதிகளையும், இருமல் தடிமல் முதலிய ரோகங்களையும் சொஸ்தமாக்கவல்லது. இது ஆண்மையையும் மனக்கிளர்ச்சியையும் ஆக்கவல்லது.

விலை: டப்பி 1 அணா 8. ஒரு டசின் டப்பிகள் தபாற்செலவுட்பட ரூபா 4 அணா 13.

விலாசம்:—

KISHORI LAL KHETRI,
89 BEADON St. CALCUTTA.

கிஷோரி லால் காயத்கிரி,
89. பீடொன் தெரு, கல்கத்தா.

(Y. 23).

[ESTABLISHED 1909].

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
### Kairul Muslimeen Medical Hall
### PORTONOVO (*SouthArcotDistrict*).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம். சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லாஇன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்ற விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

### லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுசப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

### வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்சிலவு இனாம். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரையமும், தபால்சார்ஜ் ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். வெளியூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது வைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனாமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனறியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனாம் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address:
Khader Brothers
Porto-Novo.

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை தென்னாற்காடு ஜில்லா.

(Y. 19).

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.